# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,210 — 1960 ඔක්තෝබර් 7 වැනි සිකුරාදා — 7.10.1960**

12,210 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 239 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 239 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணயவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### றோயல் கல்லூரி—பிரவேசம் 1961

1961 ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரும் வகுப்பில் (முதலாவது பாரம்) பிள்ளைகளைச் சேர்ப்பதற்கான ஒரு பிரவேசப் பரீட்சை 1960 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 12 ந் திகதி சனிக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறும். மற்றைய வகுப்புகளில் இடமில்லை.

பரீட்சார்த்திகள் ஐந்தாம் வகுப்புக்குரிய தராதரத்தையடைந்தவர்களாயும், 1961 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி 10 வயது 6 மாதங்கட்கும் 11 வயது 6 மாதங்கட்குமிடைப்பட்ட வயதினையுடையவராயுமிருத்தல் வேண்டும். இதில் மாற்றமெதையும் செய்தல் அதிபரைப் பொறுத்தது. ஆயினும் தக்க காரணமின்றி மாற்றமெதுவும் செய்யப்படமாட்டாது.

இதற்குரிய விண்ணப்பப் பத்திரங்களை றோயல் கல்லூரிப் பதிவுகாரரிடமிருந்து பெறலாம். விண்ணப்பங்கள் 1960 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை 12 மணிக்குப் பிந்தாமல் அதிபரைச் சேரல் வேண்டும்.

இப் பரீட்சை பற்றிய முழு விவரங்களையும் றோயல் கல்லூரிப் பதிவுகாரரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பரீட்சை பற்றிய கடிதப்போக்குவரத்து எதுவும் அதிபரின் பெயரைக் குறித்து அவருக்கு அனுப்பலாகாது.

டட்லி கே. ஜி. டி. சில்வா,
அதிபர், றோயல் கல்லூரி.

கொழும்பு 7,
1960 ம் ௵ செப்டெம்பர் ௴ 27 ந் உ.

10—8.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனப் பகுதி

நீர்ப்பாசன இலாகாவால் ரூபா 10,000/= த் திற்கும் அல்லது மேலதிகமாகவும் பதியப்பட்டிருக்கும் ஒப்பந்தக்காரரிடமிருந்து 100,000 இரட்டைக் கிடுகள் கந்தளாய் நீர்ப்பாசன எஞ்சினியரிடம் கொண்டு வந்து கொடுப்பதற்கு 25.10.60 காலை 10.00 மணி வரை திருகோணமலையில் உள்ள பெரும்பாக நீர்ப்பாசன எஞ்சினியரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

முழு விபரங்களுக்கும், விண்ணப்பப் பத்திரங்களுக்கும் கந்தளாய் நீர்ப்பாசன எஞ்சினியரிடம் 10.10.60 ல் இருந்து 22.10.60 வரைக்கும் மனுச்செய்து கொள்ளலாம்.

நீர்ப்பாசன எஞ்சினியர்,
கந்தளாய்.

10–70

---

### நீர்ப்பாசன இலாகா

1. கீழே குறிக்கப்பட்ட வேலைகளுக்கு 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணி வரை வடமத்திய பெரும்பகுதி அதிபர் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்வர்.

(i) மகாகண தராவையில் பண்டகசாலைப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்தல் ;

(ii) மகாகண தராவையிலுள்ள பண்டகசாலையில் கிடுகள் கொடுத்தல்.

2. ரூபா 20,000 அல்லது கூடிய தொகைக்கு நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட்ட பதிவு காரர்களுக்கு எக்கச்சேரியிலும்சரி ஒவ்வொன்றிற்கு ரூபாய் 25 ம் முற்பணம் கட்டி றிசிற் சமர்ப்பித்தால் கேள்விப் பத்திரம் வழங்கப்படும்.

3. கேள்விப் பத்திரம், நீர்ப்பாசன இலாகா அதிபர் மகாகண தராவ மிகிந்தலை அவர்களின் காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ம் திகதி திங்கட்கிழமை முதல் 21 ம் திகதி ஒக்டோபர் மாதம் வெள்ளிக்கிழமைவரை கேள்விப்பத்திரங்களும் விபரங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

4. தற்சமயம் வேலை ஒப்புக்கொண்டிருக்கும் கேள்விப்பத்திரங்கள் தங்களின் வேலைகளின் திருப்திகரம்பற்றி தாங்கள் வேலை செய்யும் உத்தியோகத்தரிடம் இருந்து அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. முதல் வேலைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தற்சமயம் அனுராதபுரம் பகுதியில் தங்கள் மோட்டார் லாரிகள் கொண்டு செல்வதற்கு அனுமதி உள்ளவர்களாகவும் உடனடியாக வேலையை ஒப்புக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

6. கேள்விப் பத்திரங்களைத் திறக்கும்போது விண்ணப்பக்காரர்கள் சமூகந்தர அனுமதிக்கப்படுவார்கள்.

நீர்ப்பாசன இலாகா அதிபர்,
மகாகண தராவ.

மிகிந்தலை,
1960 ம் ௵ செப்டெம்பர் ௴ 23 ந் உ.

9646.

## விளம்பரம்

1960 ம் ஆண்டு ஐப்பசி (அக்டோபர்) மாதம் 19 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு ஐப்பசி (அக்டோபர்) மாதம் 21 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு ஐப்பசி (அக்டோபர்) மாதம் 15 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆப் புரட்டாதி (செப்டெம்பர்) மீ 27 ந் உ.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. *பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும்* **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. *தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்*, **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

3. *கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும்,* **சனிக்கிழமைகளில்** *மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.*

4. *கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.*

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும்.** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.*

6. " *நகலை* " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** *பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.*

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. *வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.*

9. *நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரால் "* கையொப்பமிடப்பட்டு *அல்லது* கையொப்பம் *அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.*

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** *தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—*

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| *ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய* | .. | 10 | 0 |
| *மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி* | .. | 5 | 0 |
| *ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம்* | .. | 60 | 0 |
| *இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம்* | .. | 120 | 0 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** *அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

12. **வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி.ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி.ப. 3.30 மணி)** *அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு* **சகல** *அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முற்பணமாக கொழும்பு அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | | ரூ. ச. | | |
|---|---|---|---|---|
| *ஒரு வருட சந்தா* | .. | 15 0 | .. | ஒவ்வொரு பகுதிக்கும் |
| | | 7 0 | .. | ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி | .. | 0 25 | | |
| | | 0 31 | .. | தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 10 | | |
| | | 0 14 | .. | தபாற் செலவுடன் |

15. *கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல்* **வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது